15.03.2024

<u>கூடுதல் அமர்வு நீதிமன்றம்(விரைவு நீதிமன்றம்) விழுப்புரம்.</u>

<u>அமர்வு வழக்கு எண்.20/2019</u>

அ.சா. 2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நபி பாஷா | | |
| த/பெ | நபிஅசேன் | | |
| கிராமம் | டி.எடப்பாளையம் | தொழில் | |
| தாலுக்கா | திருவெண்ணெய்நல்லூர் | வயது | 56 /2024 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விவசாய வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்துபோன அப்துல் ஜபார் எனக்கு அண்ணன் முறை ஆகும். இறந்துபோன அப்துல் ஜபாருக்கு இரண்டு மனைவிகள். ஒரு மனைவி திருக்கோவிலூரில் என்.ஜே நகரிலும், இன்னொரு மனைவி செவலை ரோட்டிலும் குடியிருக்கிறார்கள். அவர் காவல் துறையில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து பணி ஓய்வு பெற்று டி. எடப்பாளையம் கிராமத்தில் விவசாய வேலை செய்து வருகிறார். நிலத்தில் ஒரு வீடு கட்டி பகலில் அங்கு இருப்பார். 27.06.2018ந் தேதியில் 11 மணிக்கு அவர் நிலத்திலுள்ள வீட்டிற்கு சென்றோம். அங்கு ஜாகீர் மற்றும் மஜித் அவர்களுக்கு சொந்தத்தில் முறையிட்டோம். அவர் பஞ்சாயத்து செய்தார். அன்று 12.1/2

மணிக்கு பஞ்சாயத்து நல்லப்படியாக முடிந்துவிட்டது. 12.30 மணிக்கு சென்று பிரியாணிவாங்கி 1.30 மணிக்கு கொண்டு வந்து கொல்லையில் உள்ள வீட்டில் அப்துல் ஜபாருக்கு கொடுத்தேன். அவர் நீ வீட்டிற்குபோ நான் பிரியாணி சாப்பிட்டுவிட்டு கொஞ்சம் நேரம் கழித்து போகிறேன் என்று சொல்லிவிட்டார். நான் அங்கிருந்து சென்ற பிறகு சுமார் 2.30 மணிக்கு ரொகாயாபீ எனக்கு போன் செய்து மேற்படி அப்துல் ஜபார் நான் போன் செய்தால் எடுக்கமாட்டேன் என்கிறார் என்று சொன்னார். நான் அதற்கு அவரிடம் திருவெண்ணெய்நல்லூர் போவதாக

என்னிடம் சொன்னார். அதனால் போன் எடுத்திருக்க மாட்டார் என்று சொன்னேன். மீண்டும் மாலை சுமார் 6.1/4 மணிக்கு ரொகாயாபீ எனக்கு போன் செய்து நீங்கள் அங்கு சென்று பார்த்துவிட்டு வாருங்கள். அவருக்கு போன் போகமாட்டேன் என்கிறது என்று சொன்னார். நான் அப்போது அங்கு போனேன். சுமார் 5 அல்லது 10 நிமிடங்களுக்குள் அங்கு சென்றேன். அங்கு நான் சென்றபோது ஒரு கதவு லேசாக திறந்து இருந்தது. ஒரு கதவு மூடி இருந்தது. நான் உள்ளே சென்ற பார்த்தேன். உள்ளே வெட்டு காயத்துடன் ரத்தவெள்ளத்தில் அவர் குப்புற கிடந்தார். சுவர் முழுவதும் ரத்தமாக இருந்தது. நான் அவரது அண்ணன் ஷம்சுதீன் என்பவருக்கு போன் செய்து சொன்னேன். எல்லோரும் சொந்த பந்தங்களுடன் வந்துவிட்டார்கள். ஷம்சுதீனும் அவரது குடும்பத்தாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள். காவல் ஆய்வாளர் அவர்கள் விசாரித்தார்கள். நடந்ததை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**